

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரத்தில் நிர்வாகத்திற்குட்பட்ட, நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோயில் வளாகத்தில் ரூ. 1.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள உலோக திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டிடத்தினை இன்று (14.08.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 531/2016 நாள்: 14.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம், நாகராஜா கோவில் வளாகத்தில் ரூ.1.28 கோடி செலவில் உலோக திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டிடத்தினை மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் இன்று (14.08.2016) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்து அறநிலைத்துறையின் மூலம், தமிழ்நாட்டில் 17 உலோக திருமேனிகள் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்படும் என தெரிவித்திருந்தார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள், சுசீந்திரத்தில் நிர்வாகத்திற்குட்பட்ட நாகர்கோவில் அருள்மிகு நாகராஜா திருக்கோயில் வளாகத்தில் ரூ. 1.28 கோடி செலவில் உலோக திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டிடம் கட்டப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. இதனை மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள்,இன்று (14.08.2016) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த உலோக திருமேனிகள் பாதுகாப்பு மைய கட்டிடத்தில் சி.சி.டி.வி கண்காணிப்பு கேமரா, அலாரம், பாதுகாப்பு பெட்டகம், தீயணைப்பு உபகரணங்கள், தேக்குமர கண்ணாடி காட்சிப் பெட்டி ஆகியவற்றின் மூலம் சிலைகள் பாதுகாப்பாக வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஆவணி ஞாயிற்றுக்கிழமை திருவிழாவையொட்டி, பக்தர்கள் சிரமமின்றி, சாமி தரிசனம் செய்வதற்கு ஏதுவாக, திருக்கோயில் நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் செலவில், அனுகுசாலை தரை தளம் சீரமைத்து மேம்படுத்துதல் மற்றும் கழிப்பறை மேம்பாட்டு பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதைபோல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் சுமார் ரூ.3 கோடி செலவில் திருப்பணிகள் நடைபெற்று வருகிறது எனவும், தற்போது ரூ.87 இலட்சம் செலவில் திருப்பணி வேலைகளுக்கு கூடுதல் நிதி அனுமதிக்கப்பட்டு, திருப்பணிகள் துவங்கப்பட உள்ளது எனவும், மேலும், சுமார் 412 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்று வரும் திருப்பணிகளில் பழுதடைந்துள்ள கொடிமரம் மாற்றி, புதிய கொடிமரம் ரூ.20 இலட்சத்தில் நிறுவப்பட உள்ளது எனவும், இதற்கு கேரள மாநிலம் பத்தனம்திட்டி கோண வனச் சரகத்தில் தேக்குமரம் 75'' அடி உயரம் மற்றும் 85'' நடு சுற்றளவு கொண்ட தேக்குமரம் கேரள அரசின் உத்தரவு பெறப்பட்டு, நடவடிக்கையில் உள்ளது எனவும், குழித்துறை ஸ்ரீதேவி குமரி மகளிர் கல்லூரியில் ஆய்வுக்கூடம் மற்றும் நூலகம் கட்டடப்பணிகள் ரூ.95.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது எனவும், மேலும், கூடுதலாக ரூ.36.50 இலட்சம் தமிழக அரசால் அனுமதிக்கப்பட்டு, 6 வகுப்பறைகள் கட்டடம் தரைதளம் மற்றும் முதல் தளம்

வடிவமைப்பில் கட்ட நடவடிக்கையில் உள்ளது எனவும், கன்னியாகுமரி அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயில் திருவேணி சங்கமத்தில் 16 கால் மண்டபம்/தர்ப்பண மண்டபம் மற்றும் வளாகம் பழமையான முறையில் ரூ.5 இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டுள்ளது எனவும், கன்னியாகுமரி, விவேகானந்தபுரம் அருகில் உள்ள சக்கரதீர்த்த குளம் ரூ.40 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு வருகிறது எனவும் இந்து அறநிலையத்துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வின் போது, தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு. எம்.எஸ். சாரதாமணி, இணை ஆணையர்(திருக்கோவில்கள்) திருமதி. பாரதி, உதவி பொறியாளர்(திருக்கோவில்கள்) திரு. ராஜ்குமார், கண்காணிப்பாளர் திரு.ஜீவானாந்தம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துகிருஷ்ணன், நாகராஜா திருக்கோயில் மேலாளர் திரு. சண்முகம்பிள்ளை, திரு. கனகராஜ், திரு. சந்திரன், திரு. என்.என்.ஸ்ரீ ஐயப்பன், திரு. வேல்முருகன், திரு. ரவி, திரு. மணி, திரு. மனோகரன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.